www.Padasalai.Net

01.10.2024 முதல் 31.12.2024
மூன்று மாதங்களுக்கு
சம்பளம் வழங்கும் அதிகாரம்

பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

**கடித (efile) எண்.10137/பக5(1)/2024 –1, நாள். 30.10.2024**

அனுப்புநர்
திருமதி .சோ.மதுமதி, இ.ஆ.ப.,,
அரசு செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் /
சார் கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர்கள், சென்னை – 01 / 08 / 35.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்.

ஐயா,

பொருள்: பள்ளிக் கல்வி – அரசு/நகராட்சி/மாநகராட்சி உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் பல்வேறு அரசாணைகளின் கீழ் தோற்றுவிக்கப்பட்ட 6156 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்களுக்கு 01.01.2021 முதல் 31.12.2023 வரை தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டது – 01.04.2024 முதல் 30.09.2024 வரை ஊதிய கொடுப்பாணை வழங்கப்பட்டது. – 01.10.2024 முதல் 31.12.2024 மேலும் மூன்று மாதங்கள் ஊதியக் கொடுப்பாணை (Pay Authorization) வழங்குதல்– தொடர்பாக.

பார்வை
1). அரசாணை (1டி) எண்.389 பள்ளிக் கல்வித் 5(1) துறை, நாள். 24.05.2018.
2) அரசாணை (1டி) எண். 145, பள்ளிக் கல்வித் 5(1) துறை, நாள். 01.09.2021.
3) பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 001508/எல்/இ3/2024, நாள் 13.01.2024.
4) கடித (efile) எண்.3128/ப.க5(1)/2024, நாள்.25.04.2024.
5) பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.001508/எல்/இ3/ 2021, நாள்.10.10.2024.

--------

பார்வை 1–ல் காணும் அரசணையில் தமிழகத்தில் உள்ள அரசு/நகராட்சி/ மாநகராட்சி/உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் பல்வேறு அரசாணைகளின் கீழ் தோற்றுவிக்கப்பட்ட 6156 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது. பார்வை 2–இல் காணும்

www.Padasalai.Net

அரசாணையில், மேற்காணும் 6156 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்களுக்கு 01.01.2021 முதல் 31.12.2023 வரை தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டது. பார்வை 3-இல் காணும் பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகளின்படி இப்பணியிடங்களுக்கு 01.01.2024 முதல் 31.03.2024 வரை ஊதி கொடுப்பானை வழங்கப்பட்டது. பார்வை 4-இல் காணும் கடிதத்தில் இப்பணியிடங்களுக்கு 01.04.2024 முதல் 30.09.2024 வரை ஆறு மாதங்களுக்கு ஊதிய கொடுப்பானை வழங்கப்பட்டு முடிவுற்ற நிலையில், 01.10.2024 முதல் 31.03.2025 வரை மேலும் ஆறு மாதங்களுக்கு ஊதியக் கொடுப்பாணை (Pay Authorization) வழங்குமாறும் பார்வை 5-இல் காணும் கடிதத்தில் பள்ளிக் கல்வி இயக்குநர் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

2. பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துருவினை பரிசீலனை செய்து, மேற்குறிப்பிட்டுள்ள 6156 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்களுக்கு 01.10.2024 முதல் 31.12.2024 முடிய மூன்று மாதங்களுக்கு ஊதியம் பெற்று வழங்க ஏதுவாக ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்கப்படுகிறது. மேற்படி அலுவலர்களுக்கான அக்டோபர் 2024 முதல் டிசம்பர் – 2024 முடிய மூன்று மாதங்களுக்கான சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக் கொண்டு ஊதியம் பெற அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

3. இக்கடிதம், இத்துறையின் மின்கோப்பு எண்.10137/ப.க5(1)/ 2024-ல் நிதித்துறையிடம், 28.10.2024 நாளில் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

30/10/24

(அரசு சார்புச் செயலாளர்)
அரசு செயலாளருக்காக

**நகல்**

பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை-6
மாநிலக் கணக்காயர், சென்னை-18/35.
நிதி(கல்வி-II)துறை , சென்னை-9.
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்